


துணை முதல்வராக பொறுப்பேற்ற பின் சேலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நேற்றிரவு திண்டுக்கல் சென்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் பரமத்தி வேலூர் எல்லையில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் வி.ஜி.அன்பழகன், சாந்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ரங்கசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் பி.பி.சாமிநாதன், பி.சிவக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.செல்வராசு, ஜி.தங்கவேல், கு.பழனிவேல், எம்.தங்கவேல், பி.பி.தனராசு, கே.கே.சண்முகம், ஏ.பி.ஆர்.சண்முகம், நாச்சிமுத்து, செல்வம், இளங்கோவன், நகர கழக செயலாளர்கள் கார்த்திகேயன், விஜயகண்ணன், ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் திருமலை, கருணாநிதி, முருகன், ரமேஷ்பாபு, முருகவேல், ராமலிங்கம், கார்த்திராஜ், ராமமூர்த்தி பேரூராட்சிமன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை!

# வட சென்னை திராவிடர் கழகம் கி.இராமலிங்கம் இல்ல மண விழா வரவேற்பு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, அக். 22

வடசென்னை மாவட்ட திராவிடர் கழக காப்பாளர் கி. இராமலிங்கம் - இரா.இலட்சுமி ஆகியோரின் புதல்வி இரா.கவிதா போரூர் கலாவதி ரங்கநாதனின் புதல்வர் இரா.ஹேமந்த்குமார் ஆகியோரது மண விழா வரவேற்பு நிகழ்ச்சி திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில், இந்து சமய அறநிலையத் துறை (மற்றும்) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் பி.கே.சேகர்பாபு, சென்னை பெருநகர மேயர் பிரியா முன்னிலையில், நாளை (23.10.2024, புதன்கிழமை) மாலை 5 மணிக்கு பெரியார் நகர், கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் கூட்டுறவு திருமண மாளிகையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத் தலைவர் ப.ரங்கநாதன், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன், வீ.அன்புராஜ், பொருளாளர் வீ.குமரேசன், பிரச்சார செயலாளர் அ.அருள்மொழி, மாநில திராவிடர் கழக ஒருங்கிணைப்பாளர்கள் தஞ்சை இரா.ஜெயக்குமார், உரத்தநாடு இரா.குணசேகரன், திராவிடர் கழக வழக்குரைஞரணித் தலைவர் த.வீரசேகரன், திராவிடர் கழக செயலவைத் தலைவர் ஆ. வீரமர்த்தினி, திராவிடர் கழக வெளியுறவு செயலாளர் கோ.கருணாநிதி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் பழங்குடியின் ஆணைய உறுப்பினர் வழக்குரைஞர் சு.குமார தேவன், கொளத்தூர் கிழக்கு, மேற்குப் மாவட்ட செயலாளர்கள் அய். சி. எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், 67ஆவது வட்ட சென்னை பெருநகர உறுப்பினர் எம்.தாவூத்பீ, வடசென்னை மாவட்டக் கழக தலைவர் தளபதி பாண்டியன், செயலாளர் புரசை சு.அன்புச்செல்வன், திராவிடர் கழக வழக்குரைஞர் இரா. இரத்தினகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

பேராசிரியர் வி.டெய்சி மணியம்மை இணைப்புரை வழங்குகிறார். நிறைவாக தி.செ. கணேசன் நன்றி கூறுகிறார்.

ரெட்டியார்பட்டியில் உள்ள

# ஆவின் மத்திய பால்பண்ணையில் திடீர் ஆய்வு!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மேற்கொண்டார்!

நெல்லை, அக். 22–

நெல்லை பாளையங்கோட்டை ரெட்டியார்பட்டியில் உள்ள ஆவின் மத்திய பால்பண்ணையை பால் வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பாளை சட்ட மன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் திடீர் ஆய்வுப் பணி மேற்கொண்டார்.

பாளை ரெட்டியார்பட்டியில் உள்ள ஆவின் மத்திய பால் பண்ணையை பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் ஆய்வின் போது, பால் உற்பத்தியை பெருக்குவது தொடர்பாக அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார்.

இதில் நெல்லை, தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கான ஆவினில் தற்போது பால் உற்பத்தி 42,000ம் லிட்டர் உள்ளது. இதனை 54,000ம் லிட்டராக விரைவில் அதிகரிக்க வேண்டும்.

மேலும் ஆவின் பால் விற்பனை தினமும் 32,000ம் உள்ளது. இதனையும் 35,000ம் ஆக அதிகரிக்க வேண்டும் என அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

நிகழ்வில் ஆவின் மத்திய பால் உற்பத்தி பொது மேலாளர் சிவராமகிருஷ்ணன், பண்ணை மேலாளர் ஜான்சுனில், மேலாளர் கார்த்திகேயன், நிர்வாக மேலாளர் (பொ) ரமேஷ், மேலாளர் (தரம்) கௌசல்யா மேலாளர் (விற்பனை பிரிவு)அனுஷா சிங்,பொது மேலாளர் நேர்முக உதவியாளர் சிவனு பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.





நாமக்கல் மாவட்டம்

அரசு நலத்திட்ட உதவிகள்

வழங்கும் விழா

140 புதிய திட்டப் பணிகள் ரூ. 366 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டுதல்

134 நிறைவுற்ற திட்டப் பணிகள் ரூ. 298 கோடி மதிப்பீட்டில் திறந்து வைத்தல்

16,000 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

ரூ.664 கோடி மதிப்பீட்டிலான
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
நிறைவுற்ற திட்டப் பணிகளைத் திறந்துவைத்து,
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரையாற்றுவார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பிப்பார்கள்.


அரசு சட்டக் கல்லூரி, நாமக்கல்



ஆவின் நிர்வாக அலுவலகம், நாமக்கல்


கருங்கல்-மேட்டுப்பட்டி சாலையில் திருமணி முத்தாற்றின் குறுக்கே புதிய பாலம்


டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம், நாமக்கல்

செ.ம.தொ.இ./1065/வரைகலை/2024

ரூ.114 கோடி மதிப்பீட்டில்
அரசு சட்டக்கல்லூரி, விடுதி, பள்ளிக் கட்டடங்கள்

ரூ.89 கோடி மதிப்பீட்டில்
புதிய நவீன பால்பதன ஆலை

ரூ.52 கோடி மதிப்பீட்டில்
3 பாலங்கள், 96 கட்டடப் பணிகள், இணைப்புச் சாலை

ரூ.19.50 கோடி மதிப்பீட்டில்
டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்

நாள் : 22.10.2024, செவ்வாய்க்கிழமை, மாலை 3.30 மணி, இடம் : பொம்மைகுட்டைமேடு, நாமக்கல்

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர் !

நா. முருகானந்தம்,இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009